எம்.சி.ஓ.பி. எண். 302/2024

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 25th day of August 2025
ம.சா.1.திருமதி.குப்பு க/பெ நாராயணன்

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

2 முதல் 4 வரை மனுதாரர்கள் என்னுடைய குழந்தைகள் ஆவர். எனது கணவர் அரசாங்க பேருந்தில் நடத்துனராக பணிபுரிந்தார். என்னுடைய கணவர் இறந்த போது அவருக்கு சுமார் 40 வயது இருக்கும். எனது கணவர் பேருந்து நடத்துனராக பணிபுரிந்ததற்க்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் மாத வருமாணமாக ரூ.22119/— சம்பாதித்தார் என்றால் சரிதான். 15.01.2020ம் தேதி இந்த வழக்கு விபத்து ஏற்பட்டது. களம்பூர் ரோட்டில் பகல் 1 மணிக்கு விபத்து ஏற்பட்டது. எனது கணவர் செய்யாறில் பணி முடித்துவிட்டு வீட்டிற்க்கு இருசக்கர வாகனத்தில் வரும் போது இந்த விபத்து ஏற்பட்டது. அப்போது ஒரு கார் அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டது. கார் ஓட்டுநர் மீது எந்த கவனக் குறைவும் இல்லை என்றும் எனது கணவர்அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றும், அவரது கார் உரிய முறையில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் இன்சுரன்ஸ் செய்யப்பட்டுள்ளது என்பதால், 2ம் எதிர்மனுதாரரர் தான் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.

| | |
|---|---|
| | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டுஇ அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- Tr.S. Senthil Babu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர், |

எம்.சி.ஓ.பி. எண். 302/2024

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 25th day of August 2025
ம.சா.2.திரு.கோபிநாத் த/பெ மதிழலகன்

## 1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் நயம்பாடி கிராமத்தை சேர்ந்தவர். விபத்தில் இறந்த நாராயணனை எனக்கு தெரியும். இந்த வழக்கு விபத்து 15.01.2020ம் தேதி பகல் 1 மணிக்கு ஏற்ப்பட்டது. நான் வாகனத்தில் மூலம் வெங்காயம், தக்காளி மற்றும் காய்கறி விற்பனை செய்கிறேன். நான் அரணி ரோட்டில் எடைமேடை அருகே நின்று கொண்டிருந்தேன் அப்போது டமால் என சத்தம் கேட்டு திரும்பி பார்த்த போது ஒரு காரும், ஒரு இருசக்கர வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. உண்மையில் எனக்கு விபத்து சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும் மனுதாரர்கள் அதிக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்க்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.

| | |
|---|---|
| | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டுஇ அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- Tr.S. Senthil Babu,<br><br>சார்பு நீதிபதி,<br>போளூர், |

எம்.சி.ஓ.பி. எண். 302/2024

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 25th day of August 2025
ம.சா.1.திருமதி.குப்பு க/பெ நாராயணன்

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்துபோன நாராயணனுக்கு இந்த மனுதாரரகள் தான் வாரிசுகள் என்பதை காட்டுவதற்க்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவரின் தாயார் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. அவர் இறந்ததற்க்கான சான்றிதழ் தாக்ல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் தாயார் பெயர் மற்றும் அவர் இறந்த தேதி மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் செய்யாறு டிப்போவில் நடத்துனராக பணிபுரிந்தார். அவர் நடத்துனராக பணிபுரிந்தற்க்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன். நான் எனது கணவர் 2019ம் வருடத்திற்க்கான சம்பள பட்டியல் தாக்கல் செய்துள்ளேன். 2020க்கான சம்பள பட்டியல் தரவில்லை அதனால் தாக்கல் செய்ய இயலவில்லை. எனது கணவர் செய்யாறிலிருந்து கஸ்தம்பாடிக்கு இருசக்கர வாகனத்தில் வந்தார் என்றால் சரிதான். அந்த ஊர்களுக்கு இடையே சுமார் 100 கி.மீ தூரம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. எனது கணவர் ஓட்டி வந்த இருசக்கர வாகன எண் எனக்கு ஞாபகமில்லை. அந்த வாகனம் ஓட்டுவதற்க்கு எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. அந்த ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்ல் செய்துள்ளானா என்றால் ஞாபகமில்லை. எனது கணவர் இருசக்கர வாகனத்துக்கு இன்சுரண்ஸ் காப்பீடு இருந்தது. அந்த இருசக்கர வாகனம் எப்போது வாங்கினார் என்று ஞாபகமில்லை அதற்கு பதிவு சான்றிதழ் இருந்ததா என்றால் இருந்தது. உண்மையில் எனது கணவர் எவ்வித ஆவணமும் இல்லாமல் இருசக்கர வாகனத்தை போக்குவரத்து விதிகள் மீறி ஓட்டியுள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவர் வழக்கமாக இருசக்கர வாகனம் ஓட்டும்போது தலைக்கவசம் அணிவார். இந்த வழக்கு விபத்தின் போதும் எனது கணவர் தலைக்கவசம் அணிந்திருந்தார். அந்த தலைகவசத்தை காவல் துறையினர் கைப்பாற்றினார்களா என்று எனக்கு தெரியாது. இந்த விபத்து யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்தை எங்கள் பக்கத்து ஊரில் உள்ள காய்கறி வியபாரம் செய்யும் கோபி என்பவர் பார்த்ததாக எங்களிடம் சொன்னார். அந்த தகவல் குறித்து எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். சம்பவம் குறித்து நான்தான் காவல் துறையில் புகார் கொடுத்தேன். எனது கணவரை சம்பவம் நடந்த இடத்தில் சென்று பார்த்தேன். சம்பவம் மெயின் ரோட்டில் நடந்தது. சம்பவம் நடந்து சுமார் அரை மணி நேரம் கழித்து

அந்த இடத்திற்க்கு சென்றோம். அங்கு நான் சென்ற போது போலிசார், கோபி மற்றும் நிறைய பொதுமக்கள் இருந்தனர். எத்தனை பேர் என்று நான் கவனிக்கவில்லை. நான் சென்று பார்த்த போது ஆம்புலன்ஸ் இருந்தது. எனது கணவர் உயிருடன் இருந்தாரா என்று எனக்கு தெரியாது. நானும் அந்த ஆம்புலன்ஸில் சென்றேன். அந்த விவரத்தை நான் எனது புகாரில் சொல்லியுள்ளேன். விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் பதிவு எண் எனக்கு தெரியாது. அந்த விவரத்தை நான் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டநர் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட சாலையின் அகலம் எனக்கு தெரியாது. அந்த சாலையில் போக்குவரத்துஅதிகம் இருக்கும் என்றால் சரிதான். காவல் துறையினர் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநருக்கு எதிராக குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இந்த சம்பவத்தை பார்த்த கோபி அந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லியுள்ளார். அந்த வழக்கு நிலுவையில் உள்ளதாஅல்லது தீர்ப்பாகிவிட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது. உண்மையில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது எந்த தவறுமில்லை என்றும் எனது கணவர் தான் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி இந்த விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. காவல் துறையினர் எனது கணவர் இறந்த அனுதாபத்தினால் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு எதிராக தவறாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது கணவர் சம்பளம் குறித்து நான் தவறான தகவல் தெரிவித்துள்ளேன் என்றும் அவர் குறைவான சம்பளம் தான் வாங்கினார் என்றால் சரியல்ல. விபத்து காலத்தில் எனது கணவர் வாங்கிய சம்பள பட்டியல் நான் தாக்கல் செய்யாததால் அதை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 ஆவணம் வழக்கிற்க்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டது என்பதால் இந்த 2ம் எதிர்மனுதாரர் எனக்கு எந்த இழப்பீடும் தர கடமைபட்டவர்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லாததால் இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்பதால் அதை எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.

| | |
|---|---|
| | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டுஇ அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- Tr.S. Senthil Babu,<br><br>சார்பு நீதிபதி,<br>போளூர், |

எம்.சி.ஓ.பி. எண். 302/2024

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 25th day of August 2025
ம.சா.2.திரு.கோபிநாத் த/பெ மதியழகன்

## 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் நயம்பாடி கிராமத்தை சேர்ந்தவர். நான் வாகனத்தில் ஊர் ஊராக காய்கறி வியபாரம் செய்வதால் மனுதாரர்களை எனக்கு தெரியும். 1ம் மனுதாரர் கணவர் பெயர் நாராயணன் ஆகும். அவர் தமிழ்நாடு போக்குவரத்து துறையில் நடத்துனராக பணிபுரிந்தார். அவர் எந்த தடத்தில் பணிபுரிந்தார் என்று எனக்கு தெரியாது. அவருக்கும் எனக்கும் பழக்கம் இல்லை. நான் சாலையில் இருந்த போது காரும் பைக்கும் மோதி விட்டது. அனைவரும் ஓடி சென்று பார்த்த போது நானும் போய் பார்த்தேன். சுமார் 9 பேர் அங்கு இருந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. காவல் துறையினர் சுமார் 20 நிமிடத்தில் அங்கு வந்தார்கள். யார் காவல் துறைக்கு தகவல் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆம்புலன்ஸிற்க்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் பார்த்தேன் கார்தான் வலது புறம் ஏறி வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்ப்பட்டது. காவல் துறையினர் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. அவர்கள் யாரை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் மனுதாரர்களுக்கு விபத்து குறித்து தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. மனுதாரர்கள் சுமார் அரை மணி நேரம் கழித்து சம்பவ இடத்திற்க்கு வந்தார்கள். அப்போது தான் இறந்த நபரை ஆம்புலன்ஸில் ஏற்றி கொண்டு இருந்தார்கள். அதில் யார் உடன் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. ஆம்புலன்ஸில் இறந்தவர் மகனும், மனைவியும் சென்றார்கள் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. அடிப்பட்ட நபர் தலைக்கவசம், பை ஆகியவை அங்கு கிடந்தது. காவல் துறையினர் அதை கைப்பற்றனார்களா என்று எனக்கு தெரியாது. நான் விபத்தின் போது சம்பவ இடத்தில் இருந்தேன் என்பதற்க்கு ஆதாரம் ஏதும் கிடையாது. சம்பவத்தின் போது காவல் துறையினர் எனது வாகனத்தை புகைப்படம் எடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. காவல் துறையினர் சம்பவ இடத்திற்க்கு வந்து அனைவரும் கலைந்து போக சொன்னார்கள். நான் உடனே கிளம்பி விட்டேன். சம்பவம் மெயின் ரோட்டில் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த இடத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகம் என்றும் வாகனங்கள் வேகமாக போக இயலாது என்றால் சரிதான். மனுதாரர் புகார் கொடுத்த போது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. நான் விபத்து

நடந்த இடத்தில் இருந்த விவரத்தை மனுதாரர்களிடம் சம்பவம் நடந்து சுமார் இரண்டு வாரம் கழித்து தெரிவித்தேன். காவல் துறையினரிடம் நான் சம்பவத்தை பார்த்தது குறித்து தெரிவித்தானா என்றால் இல்லை. மாரிமுத்து மகன் அமர்நாத் யார் என்று எனக்கு தெரியாது. நான் திருவண்ணாமலை நீதிமன்றத்தில் அழைத்ததின் பேரில் சென்று சாட்சி சொல்லியுள்ளேன். எனக்கு திருவண்ணாமலை நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததா என்றால் இல்லை. உண்மையியல் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் எனக்கு விபத்து குறித்து எதுவும் தெரியாது என்றும் மனுதாரர்கள் கேட்டுகொண்டதின் பேரில் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரிடம் அதிக இழப்பீடு வாங்க வேண்டும் என்பதற்க்காக நான் பொய்யான சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.

| | |
|---|---|
| | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டுஇ அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- Tr.S. Senthil Babu,<br><br>சார்பு நீதிபதி,<br>போளூர், |